

# 26

# இன நல்லுறவு

மனித உறவுகள் அன்பு, சகோதரத்துவம், சகிப்புத்தன்மை, இன நல்லிணக்கம் போன்ற பண்புகளால் பிணைக்கப்படுவது மக்களிடையே சுபீட்சத்தை ஏற்படுத்து வதற்கான வாய்ப்பாக அமைகின்றது. இஸ்லாம் இதனை வரவேற்பதுடன் அதன் முக்கியத்துவம் குறித்து போதனைகளையும் வழங்கியுள்ளது. சமாதான வாழ்வை வலியுறுத்தும் இஸ்லாம், மனிதர்கள் ஒருவரை ஒருவர் அறிந்தும் புரிந்தும் வாழ்வதற்கு வழிகாட்டுகின்றது.

## சமூகங்களுக்கிடையில் நீதம் பேணல்

இனம், மொழி, பிரதேசம் ஆகிய எல்லைகளைத் தாண்டி வேறுபட்ட மதங்கள், கலாசாரங்களை பின்பற்றும் மக்கள் சமாதானமாக வாழலாம் என்பதற்கு அல்குர்ஆன் வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. இதனை அடைவதற்கான காரணியாக நீதமாக நடத்தலை வலியுறுத்தியுள்ளது. மக்களிடையே நீதமாக நடத்தலை தக்வாவுக்கு - இறையச்சத்திற்கு நிகரானது என்றும் அல் குர்ஆன் விளக்குகிறது. 'ஒரு குறிப்பிட்ட சமூகத்தார் அல்லது குழுவினர் மீது ஒருவரோ ஒரு குழுவினரோ கொண்டுள்ள விருப்பு வெறுப்பு நீதி செலுத்துவதில் செல்வாக்கு செலுத்தக் கூடாது' என்று கண்டிப்பான கட்டளை இடுகிறது அல்குர்ஆன். **''ஈமான் கொண்டவர்களே! நீங்கள் நீதி செலுத்தி அல்லாஹ்வுக்கு சாட்சியாளர்களாக இருங்கள். நீங்கள் செலுத்தும் நீதி உங்களுக்கோ உங்களது பெற்றோருக்கோ நெருங்கிய உறவினருக்கோ எதிரானதாக இருந்தாலும் கூட''** (4: 35 )

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவில் ஆட்சியமைத்த போது அங்கு இடம்பெற்ற விடயங்கள், இன நல்லுறவைப் பேணும் விடயத்தில் முன்மாதிரியாக அமைந்துள்ளன. முஸ்லிம்கள் மக்காவில் சிறுபான்மையினராக வாழ்ந்தபோது குறைஷியரின் கொடுமைகளைச் சகித்துக் கொண்டும், மதீனாவில் பெரும்பான்மையினராக வாழ்ந்தபோது சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு

மதிப்பளித்தும் வாழ்ந்தமைக்கு வரலாறு சான்று பகர்கின்றது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தொடர்ந்து ஸஹாபாக்கள், தாபிஈன்கள் காலத்திலும் இது நிதர்சனமாக இருந்துள்ளது.

### ஒப்பந்தங்களின் ஊடாக உரிமைகள் பேணப்பட்டமை

மதீனாவில் வாழ்ந்த யூதர்கள் எப்பொழுதும் இஸ்லாத்துக்கும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் எதிராகச் செயற்பட்டவர்களாவர். அவர்கள் வதந்திகளைக் கட்டவிழ்த்ததோடு, முஸ்லிம்களின்பால் முஷ்ரிக்குகளைத் தூண்டி விடவும் செய்தனர். முஸ்லிம்களின் சகோதரத்துவத்தை சீர்குலைக்கவும் முயற்சித்தனர். இவர்களால், எப்போதும் இஸ்லாத்திற்கு ஆபத்தே வந்துகொண்டிருந்திருந்தது. இருந்தபோதும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவில் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டிருந்தபோது அவர்களுடன் மென்மையாகவே நடந்து கொண்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆட்சி புரிந்த மதீனாவில் யூதர்களும் நஜ்ரான் தேசத்தில் கிறிஸ்தவர்களும் இருந்தனர். அங்கே அனைத்து சமயத்தவர்களுக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட்டன. அவர்களிடையே உடன்படிக்கைகளும் செய்துகொள்ளப்பட்டன. கி.பி. 622 இல் யூதர்களுடன் செய்துகொள்ளப்பட்ட மதீனா சாசனத்தில் சில உரிமைகள் வழங்கப்பட்டன.

- உடன்படிக்கை செய்துகொண்ட யூதர்கள் எமது பாதுகாப்பிற்கு உரியவர்கள். அவர்களுக்கு அனைத்து உரிமைகளும் உண்டு. அவர்களுக்கு அநீதி இழைக்க மாட்டோம். அவர்களது எதிரிகளுக்கும் உதவி செய்வதில்லை.
- யூதர்கள் அவர்களது சமயத்தின்படி நடப்பார்கள். திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை, பாகப்பிரிவினை போன்ற விவகாரங்களில் யூத வேதங்களின் அடிப்படையிலேயே தீர்ப்புக்கள் வழங்கப்பட முடியும்.

### கி.பி. 630 இல் நஜ்ரான் நாட்டு கிறிஸ்தவர்களுடனான ஒப்பந்தத்தில்

- நஜ்ரானிலும் அதைச்சூற்றியுள்ள பகுதிகளிலும் வாழும் குடிமக்களின் உயிர், உடைமைகள், நிலம், வணிகம், மதம், வணங்கப்படும் சிலைகள் ஆகிய அனைத்தும் இறைவன் மற்றும் இறை தூதரின் பாதுகாப்பில் உள்ளன.
- அவர்களின் தற்போதைய நிலையில் எவ்வித மாற்றமும் செய்யப்பட மாட்டாது. அவர்கள் உரிமைகள் பறிக்கப்படமாட்டாது. எந்தத் துறவியும் தேவாலயப் பொறுப்புக்களிலிருந்தும் பதவிகளிலிருந்தும் அகற்றப்படமாட்டார்கள்.

மேற்படி இரண்டு ஒப்பந்தங்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏனைய சமூகங்களுடன் நல்லிணக்கமாக நடந்துகொண்டமையை எடுத்துக்காட்டுகின்றன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தைப் போலவே ஸஹாபாக்கள் காலத்திலும் இன நல்லிணக்கம் பேணப்பட்டுள்ளது.

ஒரு முறை உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் முஸ்லிமல்லாத ஒருவரிடம் ஒரு குதிரையை விலைக்கு வாங்கினார்கள். அக்குதிரையில் சிறிது தூரம் பயணித்ததும் அதில் ஏதோ குறை இருப்பதை அறிந்துகொண்ட அவர் விற்றவரிடம் வந்து அதனைத் திருப்பி ஏற்குமாறு கூற அவர் அதனை மறுத்துவிட்டார். இருவரும் நீதிபதி ஷுரைஹ் இடம் வருகிறார்கள். வழக்கை ஆராய்ந்த காழி ''ஒரு பொருளை வாங்கிய பின்னர் இருவரும் அவ்விடத்தை விட்டுப் பிரியும் முன் அதனைத் திருப்பிக்கொடுக்கும் உரிமை நுகர்வோனுக்குண்டு. பிரிந்ததன் பின்னர் அதனை ஏற்காது மறுக்கும் உரிமை விற்போனுக்கு உண்டு'' என்று கூறி வழக்கை நிறைவு செய்தார்கள். அந்தத் தீர்ப்பில் அகமகிழ்ந்த கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், அன்னாருக்குப் பதவி உயர்வு வழங்கி கூபாவின் காழியாக நியமனம் செய்தார்கள்.

### *சமயங்களுக்கான உரிமைகள்*

ஒவ்வொரு மனிதனுக்கும் தாம் விரும்பும் கொள்கையை அல்லது மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம் உள்ளது. இது வேறுபட்ட கொள்கையையோ மதத்தையோ பின்பற்றுகின்றவர்கள் ஒருவருக்கு ஒருவர் எதிரிகள் அல்லர் என்பதையும் அதே போன்று ஒருவர் ஏற்றிருக்கின்ற மார்க்கத்தை அல்லது கொள்கையை பிறர் மீது திணிக்கும் உரிமை எவருக்குமில்லை என்பதையும் உணர்த்தி நிற்கின்றது.

**''மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது.''** (2: 256)

**''உங்களுக்கு உங்கள் மார்க்கம்; எனக்கு எனது மார்க்கம்.''** (109: 6)

அவர்கள் விசுவாசம் கொள்ளவில்லை என்பதால் அவர்கள் மீது எத்தகைய ஆதிக்கமும் செலுத்த முடியாது. **''அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவராக நீர் இல்லை''** (88: 22) என அல்குர்ஆன் கூறுகிறது.

இது போன்ற பல வசனங்கள் அல் குர்ஆனில் அதிகமாவே காணப்படுகின்றன.

கிறிஸ்தவர்கள் மிகைத்திருந்த பலஸ்தீனத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கச் சென்ற கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், தொழுகை நேரமாகும்போது, ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தில் இருந்தார். அத்தேவாலயத்தில் பொறுப்பாக இருந்த பாதிரியார் கலீபாவை அணுகி தேவலயத்தின் உள்ளேயே தொழுகையை நிறைவேற்றுமாறு கோரியபோது அதனை மறுத்த கலீபா அவர்கள், ''பிற்காலத்தில் யாராவது ஒருவர் இங்கு நான் தொழுத காரணத்தைச் சுட்டிக்காட்டி, அதைப் பள்ளிவாசலாக மாற்றக் கூடும்'' என்று கூறி தேவாயலத்துக்கு வெளியில் தனது மேலங்கியை விரித்து தொழுகையை நிறைவேற்றினார்கள்.

### *பிறர் உணர்வுகளை மதித்தல்*

யூதர் ஒருவரின் பிரேதம் ஒன்று வீதியில் சென்றபோது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து நின்றார்கள். ''அது ஒரு யூதனின் சடலம்'' எனக் குறிப்பிடப்பட்டபோது அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''அது ஓர் ஆத்மா அல்லவா'' என்று விளக்கமளித்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)



### உதவி ஒத்தாசை புரிதல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவிலிருந்து வெளியேறி மதீனாவில் வாழுகின்றபோது மக்காவாசிகள் பஞ்சம் காரணமாகப் பட்டினியால் அவதிப்படும் செய்தி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் செவிக்கு எட்டுகிறது. உடனே ஹாதிப் பின் அபீ பல்தஆ என்ற தோழரிடம் 500 திர்ஹங்கள் கொடுத்து மக்கா வாழ் குறைஷிக் காபிர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுக்குமாறு பணித்தார்கள்.

இது தவிர மக்காவில் முஸ்லிம்கள் கொடுமைக்குள்ளானபோது அவர்களுள் சிலரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அபீஸீனியாவின் கிறிஸ்தவ மன்னரான நஜ்ஜாஷியிடம் பாதுகாப்புக்காக அனுப்பி வைத்தார்கள். மதீனாவில் கிறிஸ்தவ தூதுக் குழுவொன்றை பள்ளிவாயிலில் வைத்து உபசரித்தார்கள். மதீனாவில் உள்ள யூதர்களுடன் தொடர்பை வைத்திருந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தமது அவசரத் தேவைகளுக்கு அவர்களிடம் கடன் வாங்கவும் செய்தார்கள்.

### சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சில வழிகாட்டல்கள்

- அனைத்து மக்களையும் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததியினர் என நோக்குதல்
- அண்டை அயலவர்களுடன் சுமுகமான உறவினை வளர்த்துக்கொள்ளல்
- தவறுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மன்னித்து, மன்னிப்பு கேட்டு பெருமனதுடன் நடந்துகொள்ளல்
- பொது நிகழ்வுகள், வைபவங்களில் கலந்துகொள்ளல், பரஸ்பரம் உதவிக்கொள்ளல்
- இக்கட்டான சந்தர்ப்பங்கள், தேவைகளின்போது பரஸ்பரம் உதவிக்கொள்ளல்
- பிரதேச, தேசிய நலன் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கேற்றல்
- இன நல்லிணக்கங்களை ஏற்படுத்தும் கலந்துரையாடல்கள், ஒன்றுகூடல்கள், நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், கலந்து கொள்ளல்
- அகீதா, இபாதா, ஹலால், ஹராம் போன்ற விடயங்களில் அடுத்தவர் உள்ளங்களில் இன சமய வெறுப்பு ஏற்படாதவாறு நடந்துகொள்ளல்
- சொல்லாலோ, செயலாலோ சக சமய கலாசார மக்கள் இன்னல் படுவதைத் தவிர்த்துக்கொள்ளல்

### பயிற்சி

1. இன நல்லுறவைப் பேணுவதில் மதீனா சாசனத்தின் பங்கைக் குறிப்பிடுக.
2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சகோதர மதத்தவர்களின் உணர்வுகளை மதித்து நடந்தமைக்கான உதாரணம் ஒன்றைத் தருக.
3. ஸஹாபாக்கள் காலத்தில் இன நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுக.